# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 69/2019** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு. மு. பிரபா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24 July 2026.

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில்உதவி ஆய்வாளராகபணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் முதல்நிலைய காவலராக பணிபுரிந்த மணிராஜ் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை, உதவி ஆய்வாளர் செல்வம் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின்

சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.06.2015-ம் தேதி 14.00 மணிக்கு முதல்நிலைய காவலர் மணிராஜ் நிலையப்பொறுப்பில் இருந்தபோது எட்டுச்சேரி தென்மலை ரோடு, ராமர் மகன் காளியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.187/2015 இ.த.ச.பிரிவுகள் 454, 380 IPC -ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்னமுனியான்டி மற்றும் மாரியம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ 3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் காளியப்பன், கிருஷ்ணம்மாள், கோவிந்தராஜ், சுருளி, சின்ன முனியான்டி, மாரியம்மாள், குமார், மாரியப்பன் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த முதல்நிலை காவலர் மணிராஜ், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்துரை என்பவர் பாணிமாறுதல் பெற்றதால் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் செல்வம் அவர்கள் பார்வைக்கு வைத்தார். அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் செல்வம் அவர்கள் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி 31.12.2015-ம் தேதி 5.00 மணிக்கு கரிவலம்வந்தநல்லூர் பேருந்துநிலையத்தில் வைத்து சாட்சிகள் செவல்பட்டி குமார் மற்றும் கரிவலம் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து எதிரி எவ்வித துண்புறுத்தலும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான

என்னை கூட்டி சென்றால் வீட்டில் உள்ள பீரோவில் மறைத்து வைத்துள்ள நகைகளையும், எடுத்து ஆஜர் செய்ய தயாராக உள்ளேன் எனவும், எட்டிசேரியில் இராமலிங்கபுரத்தில் உள்ள வீட்டையும் அடையாளம் காட்ட தயாராக உள்ளேன் என்ற **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ. 5 ஆகும்**. பின்பு மேற்படி எதிரியிடம் இருந்து சாட்சிகள் முன்னிலையில் 1) 5 பவுன் எடையுள்ள லட்சுமி டாலர் போட்ட கோதுமை மாடல் தங்க செயின்-1, 2) ஜோடி தலா 4 கிராம் எடையுள்ள 3 ஜோடி தங்க கம்மல், 3) 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம்-1, 4) 4 கிராம் எடையுள்ள தங்க காதுமாட்டி -1 ஜோடி, 5) கல் பதித்த சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மூக்குத்தி -1 ஆகிய பொருட்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகும்**. பின்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றிய மேற்படி 1 முதல் 5 பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த 1 முதல் 5 பொருட்கள் **சா.பொ.1 ஆகும்**. பின்னர் எதிரி தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். பின்பு வழக்கு விசாரணை முடிந்து 31.12.2015-ம் தேதி எதிரி மீது இ.த.ச .பிரிவுகள் 454, 380 IPC -ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும்கொடுக்கவில்லை என்றாலும், எதிரியிடம் இருந்து

அத்தாட்சி மூலம்பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும், படிவம் 91 மூலம் சான்று பொருட்கள் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.